# யூலை – 18 – வியாழன்

புனித கமிலஸ் தெலெஸ்லி - மறைப்பணியாளர்

ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்! அவர்தம் பெயரைச் சொல்லி வழிபடுங்கள்! திபா. 105:1

------------------------------------------------------------------

## முதல் வாசகம் : விடுதலைப் பயணம் 3 : 13 – 20

அந்நாட்களில், மோசே கடவுளிடம், "இதோ! இஸ்ரயேல் மக்களிடம் சென்று உங்கள் மூதாதையரின் கடவுள் என்னை உங்களிடம் அனுப்பியுள்ளார் என்று நான் சொல்ல, "அவர் பெயர் என்ன?" என்று அவர்கள் என்னை வினவினால், அவர்களுக்கு என்ன சொல்வேன்?" என்று கேட்டார். கடவுள் மோசேயை நோக்கி, "இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே" என்றார். மேலும் அவர், "நீ இஸ்ரயேல் மக்களிடம், "இருக்கின்றவர் நானே" என்பவர் என்னை உங்களிடம் அனுப்பினார் என்று சொல்" என்றார். கடவுள் மீண்டும் மோசேயை நோக்கிப் பின்வருமாறு கூறினார் "நீ இஸ்ரயேல் மக்களிடம், "உங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவர்-ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள்-என்னை உங்களிடம் அனுப்பியுள்ளார்" என்றுசொல். இதுவே என்றென்றும் என்பெயர் தலைமுறை தலைமுறையாக என் நினைவுச்சின்னமும் இதுவே! போ. இஸ்ரயேலின் பெரியோர்களை ஒன்றுதிரட்டி அவர்களை நோக்கி, "உங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவர்-ஆபிரகாமின் கடவுள், யாக்கோபின் கடவுள்-எனக்குக் காட்சியளித்து இவ்வாறு கூறினார் உங்களையும், எகிப்தில் உங்களுக்கு நேரிட்டதையும் நான் கண்ணாலே கண்டுகொண்டேன். எகிப்தின் கொடுமையிலிருந்து கானானியர், இத்தியர், எமோரியர், பெரிசியர், இவ்வியர், எபூசியர் வாழும் நாட்டிற்கு-பாலும், தேனும் பொழியும் நாட்டிற்கு-உங்களை நடத்திச்செல்வேன்" என்று அறிவிப்பாய். அவர்கள் நீ சொல்வதைக் கேட்பர். நீயும் இஸ்ரயேலின் பெரியோர்களும் எகிப்திய மன்னனிடம் செல்லுங்கள். அவனை நோக்கி, "எபிரேயரின் கடவுளாகிய ஆண்டவர் எங்களைச் சந்தித்தார். இப்போதே நாங்கள் பாலைநிலத்தில் மூன்றுநாள் வழிப்பயணம் போக இசைவு தாரும். ஏனெனில், எங்கள் கடவுளாகிய ஆண்டவருக்குப் பலிசெலுத்த வேண்டும் என்று சொல்லுங்கள். கைவன்மையை கண்டாலன்றி, எகிப்திய மன்னன் உங்களைப் போக விடமாட்டான் என்பது எனக்குத் தெரியும். எனவே என் கையை ஓங்குவேன். நான் செய்யப்போகும் அனைத்து அருஞ்செயல்களாலும் எகிப்தினைத் தண்டிப்பேன். அதற்குப்பின் அவன் உங்களை அனுப்பிவிடுவான்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தமது உடன்படிக்கையை என்றென்றும் நினைவில் கொள்கின்றார்.

## நற்செய்தி : மத்தேயு 11 : 28 – 30

அக்காலத்தில் இயேசு கூறியதாவது : மேலும் அவர், "பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும். ஆம், என் நுகம் அழுத்தாது. என் சுமை எளிதாயுள்ளது" என்றார்.

**தியானம்:** நூறு ஆண்டுகள் எகிப்திய அடிமைத்தனத்தில் நின்று, இஸ்ராயேலரை மோசேயைக் கொண்டு அற்புதமாக விடுதலையாக்க விரும்பிய கடவுள், எரியும் முட்புதரின் நடுவிலிருந்து மோசேயை அழைத்து அவரிடம் உரையாடுவதை இன்றைய முதல் வாசகத்தில் காண்கின்றோம். நமது துன்பமும், இன்பமும் பிறரிடமிருந்து வருவதில்லை. நாமே நமக்குள் வருவித்துக் கொள்வதுதான். பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்போரே எல்லோரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று இறைவன் எம்மை அழைக்கின்றார். இயேசுவின் நுகத்தை எம்தோள்மேல் சுமக்க வேண்டுமானால் நாம் இவ்வுலக இன்பங்கள் பலவற்றை இழக்க வேண்டும். நாம் ஒவ்வொருவரும் வித்தியாசமான படைப்புக்களாகும். சிலா் மலா்ந்த முகத்தோடு இருப்பார்கள், சிலா் ஏனோதானோ என்ற மனநிலையோடு வாழ்வார்கள். நமது எண்ணங்கள் போலத்தான் நமது வாழ்வு அமையும். நல்ல எண்ணங்கள் நல்ல செயல்களையே வித்திடுகின்றன. அவநம்பிக்கை தோல்வி மனப்பான்மையை வளா்க்கும். சிந்தனைகள் தோல்வியில்தான் கொண்டு சோ்க்கும். நம்முடைய உடலை ஓர் ஆலயமாக கருத வேண்டும். நல்ல மனித உறவுகளை வளா்க்க வேண்டும். என்னைப் போல் எல்லா உயிா்களையும் நேசித்து உதவிக்கரம் நீட்டுபவனாக வாழவேண்டும். நாநூறு ஆண்டுகள் அடிமைத்தனத்தில் வாழ்ந்து 40 ஆண்டுகள் பயணம் செய்து, இறைவன் செய்த அற்புதங்களை கண்டித்தும் மனம்மாறாத இஸ்ராயேலரைப் போன்று நாமும் எம் வாழ்வை மாற்றியமைக்காமல் வாழ்ந்ததால் எம் வாழ்வும் சோதனைகள், வேதனைகள் நிறைந்த வாழ்வாகவே அமையும் என்பதை நாம் உணா்ந்து கொள்ள வேண்டும். எனவே இவற்றிலிருந்து தப்பித்துக்கொள்ள இறைவனுடைய நுகத்தை சுமக்க எம்மைத் தயாா்படுத்தவோம்.